உ
சிவமயம்



சந்திரசேகர முதலி வழியும் மல்லாகம் வாரியார்வளவு
பூதலிடையார் வழியில் பிறந்த

# ஸ்ரீமதி செல்லையா இராமாசிப்பிள்ளை

அவர்கள்
22.01.2004
சிவபதம் அடைந்தமை குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையிட்டிப்புலம் தெல்லிப்பளை

சந்திரசேகரமுதலி வழியும்

மல்லாகம் வங்களா ஒழுங்கை

பூத உடையார் வழியில் பிறந்த

சைவவேளான் குலத்திலகி

# ஸ்ரீமதி
# செல்லையா இராமாசிப்பிள்ளை

அம்மையார்

22.01.2004 சிவபதமடைந்தமை குறித்த

# நினைவுமலர்

தோற்றம்- 1919.05.16 மறைவு: 2004.01.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

**எங்கள் பிரியமுள்ள குடும்பத்தலைவியாகிய**
**அமரர். திருமதி. செல்லையா இராமாசிப்பிள்ளை**

*எங்கள் பாசமிகு அம்மாவாக இருந்து*
*அன்புடன் எம்மைப் பேணிக்காத்து அறிவுரைகள்*
*கூறி அனைவரிடமும் பாசத்துடன் எங்கள்*
*அனைவரையும் இந்நிலைக்கு ஏற்றி*
*வைத்த எங்கள் அம்மாவே,*
*எல்லோருக்கும் நல்லவராய் உயர்ந்த பண்பாளராய்*
*வாழ்ந்து இன்று தெய்வமாகி விட்ட*
**திருமதி. செல்லையா இராமாசிப்பிள்ளை அவர்களின்**
*திருப்பாதக் கமலங்களுக்கு இம்மலரினை*
*சமர்ப்பிக்கின்றோம்.*


இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# உருவம் அருவமாகி



மலர்வு
16.05.1919

உதிர்வு
22.01.2004

அமரர்

# திருமதி செல்லையா இராமாசிப்பிள்ளை

அவர்கள்

## திதி வெண்பா

விளங்கு புகழ் சுபானு வாண்டே
வீசு புகழ் தையில் பூர்வபக்க பிரதம திதி
செங்கதிர் பூசம் காண புத்தளத்தில் செல்லையா
இராமாசிப்பிள்ளை ஐயன் பாதம் அடைந்தீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# ஸ்ரீமதி செல்லையா இராமாசிப்பிள்ளை

அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

திருமதி செல்லையா இராமாசிப்பிள்ளை அவர்கள் சுன்னாகம் ஐயனாரை குலதெய்வமாகக் கொண்டவர் மல்லாகம் வாரியார் வளவு, வங்களா ஒழுங்கை பூதவுடையார், கதிர்காம உடையார் வம்சாவழியில் வேலுப்பிள்ளை (தம்பிஅப்பா) செல்லாச்சிப்பிள்ளைக்கு ஏகபுத்திரியாக 1919.05.16 பிறந்தார். தந்தையார் மலேசியாவில் தொழில் புரிந்த படியால் சகல செல்வமும் உள்ள செல்வமகளாகவே உதித்தார். இவருடைய மாமானார் பெயர் இளையதம்பி இவருடைய குடும்பம் இன்னமும் மலேசியாவில் பெரும் இறப்பர் தோட்டங்களுக்கு சொந்தக்காரர் தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி இரசாயன + பௌதீக ஆய்வு கூடம் அவர்களின் நன்கொடையால் நிர்மானிக்கப்பட்டது. ஆனால் எட்டு மாதத்திலேயே தந்தையார் மலேசியாவில் சிவபதம் அடைந்தார். எனவே தாயுடன் தாய்மாமனாகிய தம்பிப்பிள்ளை மயில்வாகனம் தம்பதிகளுடன் அதே இடத்தில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக இருபத்திரண்டாம் வயது கல்யாணம் ஆகும் வரை இருந்தார். தாயார் செல்லாச்சிப்பிள்ளை இளம் வயதிலேயே விதவை ஆனபடியால் மறுதிருமணம் செய்து கொண்டார். எனினும் தாய்மாமன்மார்களின் குடும்பங்களும் பிள்ளைகளும் மச்சாளாகிய அம்மையாரை சொந்த சகோதரராக கவனித்தார். மச்சான்மார்கள், மலேசியாவில் தொழில் புரிந்தபடியால் எவ்வித கஸ்டமும் இருக்கவில்லை. நல்ல கல்வியும் மிக அழகும் உடையவராக திகழ்ந்தார். பொருத்தமான கல்யாணப்பருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவுடன் இருபத்திரண்டு வயதில் சமமான அரச பரம்பரையும், சைவவேளான்குலத்தினருமாகிய சந்திரசேகர முதலி வழித்தோன்றலுமாகிய தையிட்டிப்புலம் தெல்லிப்பளை சின்னப்பு செல்லையாவை திருமணம் செய்து வைத்தனர். சின்னப்பு செல்லையா அவர்கள் மிகவும் அழகானவர் ஆண்மையுள்ள பெரும் பண்ணையாளர் அவரும் தந்தையாரை சிறு பிராயத்திலேயே இழந்து தாயாரால் செல்லமாக வளர்க்கப்பட்டார். உழைப்பால் உயர்ந்தவர். இவர்களின் கல்யாணமே ஓர் சரித்திரப்பிரசித்தி பெற்ற நிகழ்வாக அமைந்தது. சோடிக்கப்பட்ட சோடிக்குதிரைகள் வண்டியில் தையிட்டிப் புலத்திலிருந்து மணமகன் வீற்றிருக்க கால்நடையாக சகல சீர்வரிசையுடன் மல்லாகம் வந்து திரும்ப தம்பதிகள் வீடு சென்ற சகல அரச சீர்வரிசைகளுடன் பவனிவந்த காட்சியை கண்டவர்கள் இன்னும் புகழ்வர். மலேசியாவிலிருந்து வந்த தந்தைவழி கொந்திராத்து சுப்பிரமணியம் தம்பதியினர் தெத்தம் செய்து கொடுத்தனர். தையிட்டிப்புலம் பொற்கலம்தம்பை மெய்ஞான வைரவரை குலதெய்வமாகக் கொண்டது பெரும் பாரம்பரிய சரித்திரத்தின் தளம். கீரிமலை பிரசித்தி பெற்ற கேணியும் சிவன் கோவிலையும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலையும் அருகே கொண்ட பெரும் கிராமம். எந்த சபையிலும் முன்னின்று வரவேற்கும் சரஸ்வதியாகிய வெற்றிலையை முதற்பயிராகவும், வாழை, கமுகு, மா,பலா, எதைப்போட்டாலும் பொன் விளையும் பூமி. வெற்றிலைக்கொடி படரும் முள்முருங்கை இலை, மாடு, ஆடு வளர்ப்புக்கு உகந்தது. இன்றும் கூட அதிஉயர் பாதுகாப்பு வலயமாகவுள்ளது. என்று இப்பிரதேசம் விடுதலையடைகின்றதோ, அன்றுதான் தமிழ் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை எனத்திகழ்கிறது.

செல்லையாவின் திடமான அத்திவாரம் இராமாசிப்பிள்ளையின் இணைப்பால் மேலும் சிறப்புற்றது. சுன்னாகச் சீதன வயல் நெல்லுக்கு மாற்றுப் பயிர்ச்செய்கைக்கும் உகந்தது. பெரும் நிலப்பரப்பு கிளிநொச்சி வயல் வளம் மிக்கது. அவர்கள் ஆறு ஆண்பிள்ளைகளையும் மூன்று பெண்பிள்ளைகளையும் வாழ்வில் பெற்றெடுத்தனர். முழுக்குடும்பமும் சிறு பராயத்திலேயே கூட்டுமுயற்சியில் விவசாயத்தில் ஈடுபட்டபடியால் மேலும் கருகம்பானை வெளியில் கிணறுகள் தோண்டி மிளகாய், வெண்காயம், திராட்சைப்பழத் தோட்டங்கள், போடப்பட்டன. குறைந்தது நாளுக்கு பத்துப்பேர் வேலை செய்யும் ஓர் பெரும் வேலைத்தளமாகியது. இந்த வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் அம்மையாரின் பங்களிப்பே காரணமாகும். வீட்டுக்கு எந்நேரமும் யார் வந்தாலும் சாப்பாடு, பால், தயிர், மோர், நெய் என்பன பரிமாறப்படும் அமுத சுரபியாகியது. சுத்தம் சுகம் தரும் என்றும் சமையலின் அவரின் கைவண்ணமும் வேறு எந்த சமய, சமூக, அரசியல் தலைவர்கள் இவ்வூர் வந்தாலும் அவர் வீட்டுக்கே வருவார்கள்.

பொதுச்சேவைகள் அனைத்திலும் முன்னின்று செயற்பட்டவர் குலதெய்வமாகிய பொற்கலம் தம்மை வைபிரவர் ஆலயத்தை இருமுறை முன்னின்று நிர்மாணித்து மணிக்கோபுரத்தையும், 22ம் மாதாந்தப் பூசைகளையும் நவராத்திரி 5ம் விழாவையும் வேறு பல பூசைகளையும் தொடர்ந்து செய்தவர். அம்மையாரே கோயில் கணக்குக்கு பொறுப்பாக இருந்தார். பிள்ளைகட்கு கல்யாண வயது வந்தவுடன் சிறப்பான சமய அந்தஸ்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரியத்திற்கேற்ப திருமணம் செய்து வைத்தனர். சீதனக்கொடுப்பனவுகள், எஞ்சிய காணிகளை முதிசமாக சமதர்ம கோட்பாடுகளில் பகிர்ந்து தந்தையார் இருக்கும்போதே எழுதியவர்கள். எல்லாம் செய்து வாழ்வில் உச்சக்கட்டத்தை அடையும்போது சீமான் சீமாட்டியாகத் தன் கையே தனக்கு உதவி, இந்த மண் சொந்தமண் என்றவர். வாழ்வில் பேரிடி விழுந்தால் போல் யுத்தம் வெடித்தது. அரச குடும்பம் அரண்மனையை விட்டு அகதிகளாக வெளியேற வேண்டியதாயிற்று. பெரும் பண்ணை அதியுயர் பாதுகாப்பு வலயம் ஆகியது. செல்லர் செல்லையா அண்ணர் இவ் நிகழ்வுகளை தாங்கமுடியாமல் 1990.10.29ல் சுன்னாகத்தில் மகன் வீட்டில் வைரவர் பாதங்களில் சாந்தியடைந்தார். இப்பிரதேசத்தின் முதல்வர் பெருமலை சரிந்தது. இராமாசிப்பிள்ளை விதவையானார். போர் தொடரவே சொற்பகாலங்களில் தனது இளைய மகளுடனும் மருமகனுடனும் பளைக்கு அகதியாகச் சென்று வாழ்ந்தார். பின்பு இந்திராணி சுடர் உடன் வன்னியிலும் சில காலம் வாழ்ந்தார்.

இறுதியாக ஏழுவருடங்கள் மூத்த மகனுடன் கரைத்தீவு புத்தளத்தில் வாழ்ந்தார். மருமகளை மகளாக்கி மருமகளும் மாமியை தாயாக்கி மிகவும் சிறப்பாக மகிழ்ச்சியாக வாழ்ந்தார். Dr வேலாயதப்பிள்ளைக்கும் பிள்ளைகள் திருமணமாகி , கனடா, லண்டனில் வாழ்வதால் திறம்பட பராமரிக்க கூடியதாக இருந்தது. ரெலிபோன் மணி அடித்தால் மிக உன்னிப்பாக கேட்பார். எல்லாப் புதினங்களையும் இறுதிவரை அறிந்து கொண்டார். பேரன் பேத்தி, கோல் எடுத்தால் முதல் அப்பாச்சியை பற்றியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பார்கள். பூட்டி கூடவே பாட்டியுடன் பேச ஆரம்பித்து விட்டார்.

செல்லையா அண்ணர் மிகவும் அமைதியானவர், குறையப்பேசுவார். ஆனால் இராமாசிப்பிள்ளை மிகவும் காரமானவர். கண்டிப்பானவர். சுடச்சுட பேசுபவர் சிறு வயதிலிருந்தே அனுபவம் அனுபவித்த தந்தை தனையனை முத்தமகன் Dr வேலாயுதபிள்ளையை குடும்ப தளபதி ஆக்கினார். அவர் சந்தித்த சாதித்த இடர்பாடுகளோ பல, ஆயினும் தாயும் தந்தையும் இவரிடம் முழுப்பொறுப்பையும் அப்போதே கையளித்து விட்டனர். அவர் குடும்பவிடயங்களில் உலகும் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீதான் நீதிபதி என்று நடப்பவர். தாய் தந்தையரின் முழு நம்பிக்கையையும் பெற்று குடும்ப தலைவரானார்.

சிறு பராயத்தில் தன்னுடன் சேர்ந்திருந்த தம்பிப்பிள்ளையார் நடுவில் மாமா புன்னாலைக்கட்டுவன் சின்னமாமா, சுப்பையா சகோதரர்களாகிய சுன்னாகம் காசிநாதர், சின்னத்துரை, அன்னபாக்கியம், செல்லையா, மச்சாள் மார்களாகிய பொன்னம்பலம், இராசம்மா, பொன்னம்மா, சுப்பிரமணியம், தனம், வல்லிபுரம், முத்துக்கிரிஸ்னர், விக்கினர் குடும்பங்களை அடிக்கடி நினைவு கூறுவார். சம்மந்திகளாகிய சுழிபுரம் அப்பாப்பிள்ளை மாஸ்ரர் ரிஜிஸ்ரார் சின்னையா பளை சின்னத்துரை குடும்பத்தினரை நன்றியுடன் நினைவு கூறுபவர்.

தையிட்டிப்புலம் மச்சான் வயிரமுத்து வேலுப்பிள்ளை, காசிப்பிள்ளை, குடும்பத்தினரையும் ஊர் மக்களையும், மறவாதவர். அவர் மச்சான் (சண்முகம்) கதிர்காமநாதர் தங்கள் பார்வையிலும் சுழிபுரம் ஆறுமுகம் சட்டம்பியார் வீட்டிலும் மச்சாள் பொன்னம்மா குணரத்தினத்தின் செல்லப்பிள்ளைகள் பேரப்பிள்ளைகளையும் அநேகமாக நேசிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பிள்ளைகள் Dr வேலாயுதபிள்ளை (சுழிபுரம்) இராணிரத்தினம் (காவத்தை) யோகநாதன் (சுன்னாகம்) சிதம்பரநாதன் (சங்கானை) கதிர்காமநாதன் (சுன்னாகம்) சோதிநாதன் (விளான்) இந்திராணி (கிளிநொச்சி) பவளராணி ( யாழ்ப்பாணம்) இராமநாதன் (சுவிஸ்) அவர்கள் மருமக்கள் செந்திரு (முன்னைய பதிவாளர் சுழிபுரம்) Dr குகதாசன் J.P (சாமஶ்ரீ) செல்லாச்சிப்பிள்ளை, சாந்தினி, நல்லநாயகி, பவளமலர், சுடர் (ஓய்வு பெற்ற படவரைஞர்) பாலசுந்தரம் (கிராமசேவையாளர் பளை) வசந்தா (சுவிஸ்) ஆவார்.

பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் சிறப்பான பொருத்தமான இடங்களில் திருமணம் செய்து கொடுத்து பெரியதோர் சாம்ராஜியத்துக்கே தலைவியாக, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் மகிழ்ந்து வாழ்ந்தார். பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் விபரம் வம்சாவழி அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. புத்தளம் கரைத்தீவில் மிகவும் திடகாத்திரமாகவும் இறுதிவரை சுயநினைவிலும் இருந்தார். 22.01.2004 மாலை 5.00 மணியளவில் எண்பத்தைந்தாவது வயதில் இறைவனடி சேர்ந்தார். மூத்த மகனும் அவரது மனைவியும் மகன் கதிர்காமநாதனும் உடன் இருந்தார்கள்.

மரணச்செய்தி கேட்டவுடன் புத்தளம் கரைத்தீவில் உடன் அஞ்சலி செய்ய திரண்டு வந்த மக்கள் கூட்டம் அவர்கள் வைத்திருந்த நன்மதிப்புக்கு சாட்சியாகும். அன்னாரின் விருப்பத்திற்கு அமைய பூதவுடல் சுன்னாகம் மயானத்திலேயே தகனம் செய்ய வேண்டும் என்ற படியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளத்திலிருந்து சுன்னாகம், வங்கி ஒழுங்கை அவர் மகன் கதிர்காமநாதன் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஈமைக்கிரியைகள் நடத்தப்பட்டு மூத்தவராலேயே சிதைக்கு தீ மூட்டப்பட்டது. உற்றார், உறவினர், ஊர்மக்கள் நலன் விரும்பிகள் அனைவரும் இறுதி மரியாதைக்கு திரண்டிருந்தனர்.

செல்லையா இராமாசிப்பிள்ளை செல்லையாவின் இராணிப்பிள்ளையாக திகழ்ந்தார். இந்நினைவுமலர் 22.02.2004 ஆத்மசாந்தி பிரார்த்தனையின் போது சமர்ப்பிக்கப்பட்டது.

**எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது**
**எது நடக்கின்றதோ, அதுநன்றாகவே -நடக்கிறது**
**எது நடக்க இருக்கிறதோ, அதுவும் -நன்றாகவே நடக்கும்.**

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளை தையிட்டிப்புலம்

பூலோகசேகர முதலியார் வழித்தோன்றல்

# திரு சின்னப்பு செல்லையா அவர்கள்

சிவபதமெய்தியமை குறித்த

# நினைவுப்பாக்கள்.

வெண்பா

ஆண்டுபிர மோதூதம் ஐப்பசியைச் சார்பூர்வம்
பூண்ட தசமிதனை யுற்றதிங்கள் - மாண்புமிகும்
செல்லையா என்றோதும் செம்மலவர் தான் -மறைந்து
நல்ல கதிப் பேறடைந்த நாள்.

ஆசிரியப்பா

மன்னுயாழ்ப் பாண மாநக ரதன்கண்
தெல்லிப்பளை யெனச் சேர்ந்திடு பதியில்
தையிட்டிப் புலமெனச் சாரும் பகுதியே
வாழிடமாக மன்னிய புகழோன்
புசல் பூலோக சேகர முதலி
தன்வழித் தோன்றிய தகைமையாளன்
வேலாயுதர் தன் விளங்கு நன் மைந்தன்
செகதலம் போற்றும் சின்னப்பு நாமன்
சேதுப்பிள்ளை தெரிவையை மணந்து
செய்யுந் தவத்தினி லெய்திய மைந்தன்
செல்லையா வெனச் செப்பு நன்னாமன்
வையக முதல்வன் வயிரமுத்து
பூவையர் திலகம் பூதாத்தைப் பிள்ளை
உடன் பிறப்பாக வுற்றிடு முதல்வன்
அன்பருளீகை அமைந்த ஆசாரம்
தானமைந்துற்ற தாரணி முதல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரப்போர்க் கிருநிதியீந்து மகிழ்தே
வாழ்வு நடாத்திய வையக முதல்வன்
பொற்கலந் தம்பையிற் புகலும் வயிரவர்
ஆலய திருப்பணி பூசைகள் அன்புடன் புரிவோன்
மாவை முருகன் மன்னுநகு லேஸ்வரர்.
ஆலயங்களிலே அமையும் நித்திய
பூசைகள் நடாத்தும் புண்ணிய சீலன்
மல்லாகப்பதி மன்னுகதிர் காம
உடையார் தன்வழி யுந்திடு மதிபன்
மலேஷியா தன்னில் மன்னி வைகிய
விளங்கு நன்னாமன் வேலுப்பிள்ளை
செல்லாச்சிப்பிள்ளைத் தெரிவையை மணந்தே
ஆற்றும் தவத்தினி லவனியிலுற்ற
இருநிலம் போற்றும் இராமாசிப்பிள்ளை
இல்லற முதல்வியாய் இந்நிலத்துறவே
செந்திரு வென்னும் தேவியை மணந்தே
வேல் மகிபனோடு விளங்கு வேல்செல்வி
வேல் சுமதியென விளங்குறு வோரைப்
புத்திர ராகப் புவியினிற் பெறற
டாக்டராக இயைந்திடு புகழோன்
விளங்கும் புகழ்சார் வேலாயுதபிள்ளை
செல்லாச்சிப்பிள்ளை தெரிவையை மணந்தே
காண் டீபனொடும் காந்த ரூபி
காசினி முதல்வன் காந்த ரூபன்
தம்மைப் பெற்ற தகைமையாளன்
உற்றநற் புகழ்சார் யோகநாதன்
சாந்தினிதேவி உயர்ந்திடு துணைவியாக
மகிந்தனோடு அஜந்தா தம்மைப் பெற்ற
செகநலம் போற்றும் சிதம்பரநாதன்
நல்ல நாயகி தன்மனை யாக
விமலன் நிரஞ்சன் மைந்தராய் விளங்கும்
காசினி முதல்வன் கதிர்காம நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளமல ரெனும் பாவையை மணந்தே
பரமசிவத்தோடு பகரும் நந்தினி
சகோதரர் பெற்றே தான் மகிழ்ந்துற்ற
சுகண மார்ந்திடு சோதி நாதன்
வசந்தா தானே பகரும் துணைவியாய்
கோகிலன் தன்னைக் குவலயத்துற்ற
இருநில முதல்வன் இராம நாதன்
குகதாச னென்னக் குலவும் டாக்ரர்
இல்லறத் துணைவனாய் இந்நிலத் துறவே
நந்தினி குமதினி நற்ஜெய வாணி
புத்திர ரென்னப் புவியினிலுற்ற
இருநிலம் போற்றும் இராணி ரத்தினம்
படவரைஞராகப் பகர் சேவையாற்றும்
சுடரெனு நாமன் துணைவனாயுறவே
தீபன் நிமலன் சேர்ந்திடு நிலானி
பகர் புத்திரரெனப் பாரினிலுற்ற
இயைந்திடு தையல் இந்திராணி
கிராம சேவகர் பாலசுந்தரம்
தன்னை மணந்தே தாரணி தன்னில்
கோகில நாத்தொடு துஷா வென்போரைப்
பாரி னிற்பெற்ற பவளராணி
தன் புத்திரரெனத் தான் மகிழ்ந்துற்றோன்
மனையாள் மக்கள் மற்றுள மருகர்
போர்களோடு பெரிதமர் சுற்றம்
உந்திடு துயரொடும் உளங் கலங்கிறவே
தன் வாழ்வொழித்துத் தான் மறைந்தனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பல்கள்

### மக்கள் துயரம்

உற்றவுன் மக்கள் உறும் மகிழ்ச்சி நோக்காது
மற்றுலகில் என்னே மறைந்தீட்டீர்- பற்றுடனே
எந்தை உமைத்தேடி என்றும் வருந்துகின்றோம்
எந்த நாள் துந்வறு வீரிங்கு.

## மருமக்கள் புலம்பல்

எம்மருமை மாமியே என்னே மறைந்தீட்டீர்
உம்மை நினைந்தே உருகுகின்றோம் -செம்மைசார்
நன்மருகர் எம்மையுமே நாடிதனில் விட்டகலத்
கென்ன நினைவுற்றனிடரோ வின்று

### பேரப்பிள்ளைகள் புலம்பல்

பாங்கான உங்கள் அறிவுரைகள் வழிநடந்து
மேதினியில் நாம் சிறப்போடு வாழ்வதை
பக்கத்தில் காலன் நின்னைவிட்டு
-வைக்கவில்லையோ
நாம் கதறுவது நின் செவிகளிலே கேட்கவில்லையோ.

உன்னருகிருந்த உடன் பாசத்தில் வளர்ந்தயாம்
நின்னுயிர்ச் செய்திகேட்டு ஒரு நிமிடம் சுவாசிக்க
-மறந்து விட்டோம்
நாம் ஆறாமல் அழுகின்ற அழுகுரல் வானையே
- முட்டிநிற்கிறது
நின் செவிகளிலே கேட்க வில்லையோ

பூவுலகில் பிறந்தவன் யாவரும் இறப்பாரென்று
-முதமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மையும்
சிறப்புற வாழ வைத்த செம்மலே
இறுதிக்காலங்களிலே என் தான் நினைத்தீர்களே.

### பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் அன்புப் பாட்டியே
எங்களை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்
உங்களுடைய அருள்முகம் காணாமல்
-தவிக்கின்றோம்
எங்களை விட்டுவிட்டு ஏன் சென்றீர்களோ
புத்திமதிகள் பல கூறுவீர்களே
இப்பொழுது நாம் யாரிடம் செல்வோம்
எம்மோடு சிலகாலம் வாழ்ந்தாலும்
உம் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது
அன்புப் பாட்டியே

### சுற்றம் புலம்பல்

உற்றவுன் சுற்றத் துறுதுயரம் நாடாது
மற்றென்னை நீர்மறைந்தீர் மாநிலத்தே தோற்றியருள்
மிக்கவுன் சுற்றம்யாம் மேவுகுறை தான் போக்க
எக்காலம் காண்போ மினி

### தேற்றம்

போற்றுமுயர் இராமாசிப்பிள்ளை பூவுலகி
-லேமறைந்தார்
ஆற்றாத் துயர்கொண் டாற்றுவதேன் சாற்றின்
நெருநுள னொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்மைக்கு இலக்கணமாக வாழ்ந்த அமரர் திருமதி இராமசிப்பிள்ளை செல்லையா.

மல்லாகம் வாரியார் வளவைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் இராசிப்பிள்ளை அவர்கள் தையிட்டிபுலம், தெல்லிப்பளையில் வாழ்ந்த அமரர்.சின்னப்பு செல்லையா அவர்களைத் திருமணம் செய்து சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்தவர்

."வையத்தில் வாழ்வாங்கு வாழ்வார்-வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

எங்கள் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய திருமதி. இராமாசிப்பிள்ளை செல்லையா அவர்கள் தனது கணவர் அமரர் செல்லையா போலவே கிராமத்து மக்களின் மேல் மிகுந்த அன்பும், ஆதரவும் கொண்டவராகவும், மக்களுக்கு பணி செய்வதில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து மனநிறைவு பெற்றவர். கடாட்சம் பெற்றவர்கள். தமது சொந்தக் கிராமத்திலே நடைபெறுகின்ற விசேட வைபவங் களிலெல்லாம் முன்னின்று சகல உதவிகளையும் வாரி வழங்கியவர்கள்.இவர்கள் இருவரும் சிறந்த விவசாயிகள் வெற்றிலைச் செய்கைக்குப் புகழ் பெற்றவர்கள். விவசாயத்துடன் இணைந்த பாற்பண்ணையும் அமைத்திருந்தார்கள். மாடு, ஆடுகளை பராமரிப்பதில் முக்கிய கவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தியவர்கள். கணவரின் விவசாய முன்னேற்றத்திற்கும், கடின உழைப்பிற்கும் பக்க துணையாக நின்றவர் அமரர் இராமாசிப்பிள்ளை அவர்கள் எவ்வுயிர்க்கும் முதற்சொல் அம்மா என்ற வரைவு இலக்கணத்தை நடைமுறையிற் காட்டியவர். தான் பெற்ற அருமைச் செல்வங்களை, அன்புடன் அரவணைத்து அவர்களின் முன்னேற்றத்திற்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தவர் தூய உள்ளம் கொண்ட இவரின் பிள்ளைகள் எல்லாம் பல் துறைகளிலும் சிறப்பாக வாழ்கின்றார்கள். நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் என்ற வகையில் தனது பேரப்பிள்ளைகளைச் செல்லமாக வளர்த்தவர். முயற்சி திருவினையாக்கும் என்று வாழ்ந்து காட்டிய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி.

**V.C** ஒழுங்கை,
கொல்லங்கலட்டி.

*சுப்பிரமணியம் பரமநாதன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்தால் உயர்ந்த உத்தமி.

ஈழமணித்திருநாட்டின் இதயமெனப்படும் யாழ் நகரின் வடபால் அமைந்தது. எழில் பூத்த கிராமம் சுன்னாகம். இக்கிராமத்தில் மல்லாகம் பாரியார் வளவு உடையார் பரம்பரையினரின் வாழ்விடமாகும். இப்பகுதியில் வாழ்ந்த கதிர்காம உடையார் பரம்பரையில் உதித்த வேலுப்பிள்ளைக்கும் செல்லாச்சிப்பிள்ளைக்கும் அருந்தவப்புதல்வியாய் பிறந்தவர் இராமாசிப்பிள்ளை அவர்கள் குழந்தைப்பருவத்தில் அழகிய தோற்றமும், புன்சிரிப்பும் கொண்ட இவர் சீருடனும் சிறப்புடனும் வளரும் காலத்தில் கல்விப்பருவம் அடைந்து கல்வி கற்றுச் சிறப்புடன் வாழ்ந்தார். பெற்றோரை இழந்த போதும் சீரான வாழ்க்கை வாழ்ந்து திருமணப் பருவமடைந்தார். இவரின் நற்குணங்களையும் அழகிய தோற்றத்தையும் கேள்வியுற்ற எமது தந்தையார் அமரர் ச.காசிப்பிள்ளை அவர்கள் இராமாசிப்பிள்ளையை தமது குடும்பத்துக்குள் மணம்முடித்து வைக்க வேண்டும் என்ற பெரு நோக்குடன் தையிட்டிப்புலம் தெல்லிப்பழை பூலோகமுதலி ஐயம் பெருமாள் பரம்பரையைச் சேர்ந்த சின்னப்புவுக்கும் சேதுப்பிள்ளைக்கும் கனிஷ்ட புத்திரனாய்ப்பிறந்த செம்மல் செல்லையா வெனும் தமது மைத்துனரை இராமாசிப்பிள்ளைக்கு திருமணம் செய்து வைக்க ஒப்புதல் செய்யப்பட்ட திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

இவர்களின் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மல்லாகத்தில் திருமணம் முடிந்து மணமக்கள் வெள்ளைக் குதிரைகள் பூட்டிய அழகு இரதத்தில் மல்லாகம் சந்தி ஊடாகப் பவனி வந்த போது மக்கள் மிகவும் வியப்படைந்தனர் சீருடனும் சிறப்புடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறம் நடாத்தி இவர்கள் "தர்மமே தலைகாக்கும்" என்ற முது மொழிக்கிணங்க தர்மம் பல செய்து மகிழ்வுடன் வாழ்ந்தனர். இவரது கணவரின் ஊரில் உள்ள பொற்கலந்தம்பை வைரவர் ஆலய புனருத்தாரணத்திலும், நித்திய, நைமித்திய விழாக்களிலும் பெரும்பங்கு கொண்டதோடு அவ்வூர் மக்களின் கல்வி நலன் கருதி தம் சொந்த நிலத்தில் நூல் நிலையம் ஒன்றை நிறுவி மக்கள் கல்வி அறிவு மேம்படச் செய்தனர். இப்பெரியோரின் தர்மச் செயல்களுக்கு இவைகள் சில எடுத்துக்காட்டாகும்.

தமது இல்லத்தில் ஆறு ஆண்சிங்கங்களையும் மூன்று பெண் அழகிகளையும் பெற்றெடுத்து பிள்ளைகளை இனிதே வளர்த்து உரிய கல்வி பெறச்செய்து தகுந்த முறையில் தொழில் தேடி வைத்து உயரிய குடும்பங்களில் திருமணங்கள் நிறை வேற்றி மக்களின் இன்புடை வாழ்வைக்கண்டு மகிழ்ந்தனர். தமது கணவர் பிரிந்த பின்னரும் தம்மக்களோடு இனிதே வாழ்ந்தவர். இராமாசிப்பிள்ளை அம்மையார் பல பேரப் பிள்ளைகளையும், பூட்டப் பிள்ளை களையும் கண்டு வாழும் பெறும் பேறு பெற்றவர்.

எம்மாமி அவர்கள் தமது 85ம் வயதில் 22.01.2004ல் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆறாத்துயரும் கொண்டோம். இவரின் பிரிவால் துயருறும் இவரது குடும்பத்தி னருக்கும் சுற்றத்தவர்க்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவிப் பதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பொற்கலந்தம் வைரவப் பெருமானை வேண்டுகின்றேன்.

சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

*கா. சரவணமுத்து* J.P
*சின்னமணி*
*(ஓய்வு பெற்ற ஆசிரியர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாசிப்பிள்ளை

பிறப்பு 1919
அந்த ஆண்டும் நோக்கிற்குரியது 1919
செல்வச் செளிப்பில் வளர்ப்பு
9 மாதக் குழந்தையாக தவளும் வயதில்
தகப்பனின் இழப்பு
மாமன்களின் அணையாக அன்பில்
ராமாசியின் வளர்வு

உயர்ந்த குடும்பத்தில் திருமணம்
உயர்வான குடும்ப வாழ்வு
16 செல்வங்களையும் ஒருங்கே பெற்று வாழ்ந்தவருக்கு
குழந்தைச் செல்வத்திலும் குறைவில்லை
முதல் பிள்ளையை வைத்தியராக
வாழ வைத்து சிகரமாக்கியவர்
ஏனையயோர்களை பல துறைகளிலும்
நுழைத்து நெகிழ்ந்தவர்
பேரன் பேர்த்திகளை பொறியியலாளர்களாக்கி
பெருமை கொண்டவர்
கல்விக்கு கண்ணியம் கொடுப்பவர்
காலமெல்லாம் போற்றியவர்
கற்றோரை உயர்த்திப் பார்த்தவர்.

சிறந்த மனைவியாக தாயாக மட்டுமின்றி
அவர் ஒரு பாட்டாளியாகவும் வாழ்ந்தவர்
அவர் அறிவு விவசாயம், கலை, வரலாறு
ஆகிய பல துறைகளிலும் பரந்து வியாபித்தது
அவர் பார்வைகளில் உரு தேடல்
அசைவுகளில் அனுபவ முதிர்ச்சி
வார்த்தைகள் வைரமானவை, வாழவைப்பவை
அனுபவ முத்துக்கள் கம்பீரம், உறுதி நிறைந்தவை.
85வயதிலும் புலன்களின் கூர்மை
கௌரவத்தை கண்ணியமாகவும்
மானத்தை மாண்பாகவும்
மன உறுதியை விடாப்பிடியாகவும் கொண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களின் ஒவ்வொர் அசைவையும்
அணுவணுவாக நோக்குவர் விளக்குபவர்
முற்போக்கு சிந்தனை கொண்டவர்.
அவரது ஒவ்வோர் எண்ணங்களும் அசைவுகளும்
கல்வி மணம் கமழும்
யாழ் மண்ணை மணக்கச் செய்தது
கலாசாரத்தைப் பறை சாற்றியது
சாகும் வரை ராமாசி தனி ஒரு
இராமாசியாக ஒரு ராசாத்தியாக அவர்
அவராகவே வாழ்ந்து முடித்தவர்
நாங்கள் அவருடன் பழகிய காலத்தில் ராமாசிக்
கடலில் தேடிய முத்துக்கள் சிலவே
இன்னும் தேடப்படாத அறிவுச் செல்வங்கள் ஆயிரமாயிரம்
நாங்கள் சந்தித்த முதியோர்களில் இவர்
போற்றத்தக்கவர், பெருமைக்குரியவர், நினைவிற்குரியவர்
இவரின் மறைவால் மீளாத்துயர் கொள்கிறோம்
யாழில் தோன்றிய சங்கீதம்
காரைதீவு காற்றில் கலந்து மறைந்ததையிட்டு
எம் ஊரே கண்ணீர் சிந்துகிறது.

*அல்ஹாஜ் K.M.A. அஸீஸ்*
*முன்னாள் பாடசாலை அதிபர் குடும்பம்.*
*(K.M.A. அஸீஸ்)கரைத்தீவுபொன்பரப்பி. புத்தளம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
## இராமாசிப்பிள்ளை அவர்கள் பற்றி.....

மானிடப்பிறவி எடுத்தவர்களின் மறைவு தாங்க முடியாத தவிர்க்க மடியாத ஒரு நிகழ்வு ஆகும். மரணம் என்பது ஜனனத்தின் பொழுதே நிச்சயிக்கப்பட்டுள்ளது.

அமரர் செல்லையா இராமாசிப்பிள்ளை அம்மையார் அவருடைய கணவர் இறந்து 13 வருடங்களுக்கு மேலாகியும் தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் ஒரு குறையின்றி வாழ்ந்து வந்துள்ளார். இவரது கணவரின் வாழ்வு வெற்றியளிக்கக்கூடியதற்கு காரணம் திருமதி. இராமாசிப் பிள்ளை அம்மையார் தனது வீட்டிற்கு செல்பவரை அன்புடன் உபசரிப்பார். அதே போல் தன் பிள்ளைகளையும் நல்ல பண்போடு வளர்த்துள்ளார். கணவனின் உழைப்பைக் கவனமாகச் செலவழித்து மிகுதியைச் சேமித்து அவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளார். இவர் எங்கள் கிராமமாகிய மல்லாகத்தைச் சேர்ந்தவர். இவரைக் கரம் பிடித்த அமரர் செல்லையா தையிட்டிப் புலத்தைச் சேர்ந்தவர் இவர்களின் திருமண விழா யாழ் குடாநாட்டில் தனிச் சிறப்பு மிக்கதாக நடந்ததைப் பற்றி அக்காலத்தில் வாழ்ந்த சிலர் நினைவு கூர்வதை நான் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

இவரின் கணவர் சமூக சேவையாளர் திருமதி இராமாசிப்பிள்ளை அம்மையார் மிகவும் உறுதுணையாக விருந்தார். இருவரும் தங்கு தாமதமின்றி பாடசாலைக் கட்டிடம் கோயில் திருப்பணிக்கென அவர்களை நாடிச்சென்றால் தாங்கள் அரும்பாடுபட்டுச் சேர்த்த பணத்தை முழுமனதுடன் வாரி வழங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கேள்விகளில் வல்லவராக திகழும் 6 புத்திரர்களும் 3 புதல்விகளும் உண்டு பெற்றோர் விட்ட பணிகளைத் தொடர்வதிலும் தம்தம் தொழில்களில் சிறப்பெய்தி நல்ல இடங்களில் திருமணம் செய்து பலரும் போற்றும் வகையில் சிறந்து வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் அதிக ஈடுபாடுடையவர் புதல்வரில் மூன்றாவது திரு. யோகநாதன் என்பவர் அவர் எங்கள் உறவினராகிய செல்லாச்சிப்பிள்ளையை திருமணம் செய்துள்ளார். திரு யோகநாதன் அவர்களும் தந்தையாரைப் போல் தனது தொழிலுடன் சமூக சேவையில் தனது நேரத்தைச் செலவிடுவார் கோயில் திருப்பணிகளில் முன்னின்று உடலுதவிமாத்திரமின்றிப் பண உதவியும் மனப்பூ ர்வமாக வழங்குவார்.

நல்ல வாழ்வு வாழ்ந்து பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூ ட்டப்பிள்ளைகள் சூழ்ந்துள்ள நேரத்தில் இயற்கை எய்திய திருமதி இராமாசிப்பிள்ளை அம்மையாரை நினைவு கூர்ந்து அன்னாரின் ஆத்மா சாந்தியைப் பிரார்த்திப்போமாக.

*திருமதி. மா. ஸ்ரீபாஸ்கரன்*
*முன்னாள் தலைவர்*
*வலிவடக்குப்பிரதேச சபை*
*மல்லாகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்வுக்கு உறுதுணை நின்ற உத்தமி.

சிவந்த மா நிறம் வாட்டசாட்டமான உடற்கட்டு சுருண்ட கேசம் பளபளக்கும் கண்கள் புன்சிரிப்பு தவழும் உதடுகள் ஒருங்கே முழுக்கட்டமைப்பாக நோக்கும் போது தங்க விக்கிரகம் போல தட்டி தட்டி சிற்பிகள் செய்தசிலை போன்று காட்சி தரும் தங்கரத்தினம் என்று எம்மால் அழைக்கப்படும் இராமாசிப்பிள்ளை தங்கமானவளே. தங்கரத்தினம் என்பதே எனது பார்வையில் பொருத்தமானது.

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாசாலையில் நான் ஆரம்பவகுப்புகளில் படிக்கும் போது எனக்கு முந்திய மேல் வகுப்புகளில் அவர் படித்துக் கொண்டிருந்தார். சிறந்த விவேகியாகவும் முதல் தர மாணவியாகவும் விளங்கினார். நான் ஐந்தாம் வகுப்பிற் படிக்கும்போது அன்றைய நிலையில் அவர் கல்வியைத் தொடராது நிறுத்திவிட்டது கவலைக்குரியது. எனது வீட்டிற்கு அருகாமையில் அவர் வீடு இருந்தது அவரது வளவின் ஒரு பகுதியில் நிற்கும் இலுப்பைமரம் அடுத்த வளவுப் புளியமரமும் சேர்ந்த பகுதி சிறுவர்களாகிய எமது விளையாட்டு மைதானம். தினமும் சென்று விளையாடுவோம். அன்று சனிக்கிழமை. காலையிலேயே விளையாட்டு. அது ஒரு வாரோட்டப் போட்டி என்னைக்கண்டதும் வரும்படி அழைத்தார். சென்ற என்னை அகர வரிசை தவறாமல் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் சொல் என்றார். தொடர்ந்து கூறிய போது கூரம்பாயினும் வீரியம் பேசேல் என்பதில் நிறுத்தியவர் இதனை விளக்க ஒரு கதை கூறுபார்க்கலாம் என்றார். திகைப்படைந்தேன். சிறிது கலக்க மடைந்தேன். வாணி அருள் கிடைத்ததோ துணிவு வந்தது எனது தமிழ் ஆசானும் தலைமை ஆசிரியருமான பலாலி பொன்னம்பலம் அவர்கள் கூறிய கதை நினைவிற்கு வரவே ஆர்வத்துடன் கூறத்தொடங்கினேன். ஔவையார் பெரிய புலவர் மற்றைய புலவர்களை வாதில் வென்ற பெருமை அவருக்குண்டு அதனால் மிகச்செருக்குடையவராய் இருந்தார். சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என மாடுமேய்க்கும் சிறுவன் கேள்விக்குப்பதில் சொல்ல முடியாது செருக்கடங்கியகதையைச் சொல்லி தொடர் சீதன் அல்ப்ஸ் மலை மீது ஓய்வு நேரத்தினை போக்கிக் கொண்டிருந்த நெப்போலியன் மலைஉச்சி நோக்கி வந்த எதிர்ப்படையினைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் மனஉறுதி தளராது தன்குதிரையின் கண்களை கைக்குட்டையினால் மறைத்துக் கட்டி அதனை செங்குத்தான ஒரு பகுதியில் பாயவைத்து பகைவர்களிடமிருந்து தப்பித்ததை "கேட்டில் உறுதி கூட்டு முடமை" என்பதன் கதையாகவும் கூறினேன். எனது பேச்சு கூறிய முறை இது கண்டு மகிழ்ந்த அவர் என்னைக் கட்டி அணைத்து தனது மகிழ்வை தெரிவித்து இப்படித்தான் இருக்க வேண்டும் எனக்கூறியவர் நிலபுலம் பணம் தொடர்பாக ஏதோ ஏதோ கூறினேன் கன்னத்தில் செல்லமாகத் தட்டி "அறக்கூர் மழுமொட்டை" என்றார் எதுவும் புரியாத நான் சிரித்துக் கொண்டே விளையாடக்காத்திருந்தவர்களை நோக்கி ஓடினேன். தங்கரத்தினக்கா இடையிடையே இப்படி கேட்பது வழக்கமாகியது ஏழாம் ஆண்டில் நிகழ்வு ஒன்று வகுப்பில் மாணவரை இருபகுதியினராகப்பிரித்து கேள்விபதில் நிகழ்வில் எதிர்தரப்பில் பிற்காலம் மயிலணி முருகன் கோயிலின் பிரதமகுருவாக இருந்த சர்வேஸ்வரக்குருக்கள் கேட்ட வினாவினை தவறான வினா எனச்சுட்டிக்காட்டியதும் அது ஆசிரியர்களின் கவனத்திற்கு வந்தது. எனது மறுப்பு சரியானதே என்ற தீர்ப்பு வழங்கப்பட்டதை அக்காவுக்கு நானே சென்று கூறினேன் தட்டிக்கொடுத்து உச்சி மோந்து நன்றாக வருவாய் என வாழ்த்தி அனுப்பினார். திருமணப்பருவமடைந்த மங்கை நல்லாளின் திருமணம் மிகச் சிறப்பாக நடந்ததாக பலர் கூறக்கேட்டிருக்கின்றேன். இரட்டைக்குதிரை பூட்டிய வண்டியில் தேவலோக அணங்கு போன்ற மணமகளுடன் மன்மதன் போன்ற அழகுடைய மணாளனும் பவனி வந்தகாட்சி பலராலும் வியந்து பேசப்பட்டதை என்பெற்றோர் கூற நேரில் கேட்டேன் மனங்குளிரக் கேட்டேன் என்னை ஊக்கப்படுத்தி கற்கத்தூண்டிய அம்மங்கை நல்லாள் நன்றாகவே வாழவேண்டும் என என் பிஞ்சு மனம் கூறியது. இனியவளான இராமாசிப்பிள்ளையின் கணவன் அழகன் மட்டுமல்ல பலர் உள்ளம் நிறைந்த பண்பாளன் சிறந்த விவசாயி ஊக்கமும் உழைப்பும் அவருக்கு கைவந்த கலை விடாமுயற்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலானவர் தையிட்டிப்புலம் அவர்களது வாழ்விடம் சமூகத்தொண்டும் தெய்வப்பணியும் தம்மிருகண்ணெனக் கருதுபவர். கணவன் குறிப்பறிந்து அதன்படி ஒழுகும் மனையாளை மிகுந்த அன்போடும் அரவணைப்புடனும் வாழ்ந்த செல்லையா அவர்களின் முன்னேற்றப்பாதைக்கு வழிவகுத்தவர். அன்பு மனையாளே பிரசித்தி பெற்ற சுன்னாகம் ஐயனார் தாழைக்கிழவோன் என்பது மருவி அதாவது திரிந்து தாழைகடகிழவன் என்று ஆனது என நான் நினைக்கிறேன். ஐயனார் எழுந்தருளிய தாழைநிற்கும் நிலம் திருமதி இராமசிப் பிள்ளைக்கு தந்தை வழியால் வந்த சொத்தாகும். அதனை ஐயனாருக்கு என்றோ கையளித்து விட்டார். அம்மையார். சுன்னாகம் காங்கேசசன்துறை பிரதான வீதியில் மல்லாகம் கிராம முன்னேற்றச்சங்க மண்டபம் அமைந்திருக்கும் காணியும் அம்மை யாருடையது. திருமணமான பின்னர் இருவரும் சேர்ந்து கிராம முன்னேற்றச்சங்கத்திற்கு நன் கொடையாக அன்பளிப்புச் செய்தது நாம் அறிந்த விடயம். இவ்விரண்டில் முன்னது தெய்வப்பணியினையும் பின்னது சமூகப்பணியினையும் காண்பித்து நிற்பதை உணரவைக்கிறது. சீர் சிறப்புடன் சுற்றம் தழுவி தெய்வம் வேண்டி வாழ்ந்த குடும்பம் மேலும் சிறப்புற காலடி எடுத்து வைத்தது மழலைச் சொற்கேட்கும் வாய்ப்பினை இறையருள் ஈந்தது திருப்பதியாகவே கிடைத்தது. சகல செல்வமும் அவர்களுக்குகிட்டியது. திருமண வைபவங்களில் வாழ்ந்தார்களே பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்பதுக்கமைய யாவும் வாய்க்கப் பெற்றும் மகிழ்வடைந்தனர் செல்வம் பதினாறுடன் இவற்றிக்கெல்லாம் மேலான செவிச்செல்வமும் இவர்களுக்கு வாய்க்கப்பெற்றது. "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை. வள்ளுவனின் இந்த தலையாய செல்வத்தினை அம்மையார் சிறுபராயத்திலேயே மேலாகப் பெற்றிருந்தார். என்பது வெளிப்படை இதனை நான் நன்கறிவேன். மனையாட்சி மங்கலமானது நன்கலனாக நன்மக்கட்பேறு அமைந்து விட்டது. மக்களின் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயற்பட்டதால் கல்வியில் அவர்கள் மேலோங்கினர். ஒவ்வோர் துறையிலும் அவர்கள் சிறந்து விளங்குகின்றனர். மக்களுக்கு செய்ய வேண்டியதாய் அவையத்து முந்தி இருக்கச் செய்த பெருமைக் குரியவராகின்றனர். இப்படியான மக்களைப் பெற என்ன தவம் செய்தனவோ என்ற பாராட்டுக்கும் உரியவராகின்றனர். மக்களை உரிய காலத்தில் திருமணம் செய்து வைத்து பெருமையடைந்தனர்.வருவதும் உற்றார் உறவினரிடம் கலந்து மகிழ்வதும் அம்மையாரின் வழக்கம் பிறந்த மண்ணை அவர் என்றும் மறந்ததில்லை படித்தபாடசாலையை நினைவு கூர்வதில். மகிழ்வுறுவார். எங்கள் வீட்டிற்கு வந்து கால நேரம் போவது தெரியாது உரையாடல் நடக்கும். மிகக்கண்டிப்பானவர் நீதி வழிநடந்தவர் என்பதும் அவரது பேச்சுக்களில் தெளிவாகவே தென்படும் கதையோடு கதையாக நான் சிறுவனாக இருந்தவேளை கூறினீர்களே. அறக்கூர் மழுமொட்டை இதில் மழுமொட்டை என்பது நான் கூறி முடிக்க முன்னரே நீ பெரும் தன்னையாக மற்றவர்களை நம்புகிறாய் மனிதாபிமானம் என்றெல்லாம் ஏதோ கூறுகிறாய் நினைக்கிறாய் இந்த நிலையில் சிலவிடயங்களைக் கூறி என் முட்டாள் தரமானசிந்தனையை நான் ஏமாற்றுப் பேர்வழிகளால் ஏமாந்தேன். அது உண்மை அதுபற்றி கவலை தெரிந்த நான் மேலே ஒருவன் இருக்கிறான். ஏன்றோ ஒருநாள் வழிகாட்டுவான் என்றேன். சரி மழுமொட்டை என்பதன் அர்த்தம் புரிகிறதா உன் கூர்மையான புத்தியையும் மிக அசட்டையான குணத்தையும் அன்றே உணர்ந்து தான் அப்படிக்கூறினேன் ஏற்றுக்கொள்கிறாயா என்று கூறவே எல்லோரும் சேர்ந்து செய்த சிரிப்பொலி அடங்க அதிக நேரம் பிடித்தது. முடிவில் அவர் கூறியது வஞ்சமில்லார்க்கு என்றும் தரும் சிவந்த தாமரையாள் தான் என்று தட்டிக்கொடுத்து நன்றாகவே இருப்பாய் என்று ஆசி கூறியது என் நெஞ்சை விட்டகலாது.அம்மையார் சேற்றில் மலர்ந்த செந்தாமரை நல்ல குடும்பத்தலைவியாய், மனைவியாய், தாயாய், உற்றார் உறவினர்களுக்கு நல்ல வழிகாட்டியாய் உதவுபவளாய் எவரையும் பேணிப்பாதுகாத்த மகராசியாய் வாழ்ந்தார். இராமாசிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவான பூரணமான வாழ்வு வாழ்ந்தார். செல்வம் பதினாறுடன் பதினேழாவது செவிச்செல்வமும் நிரம்பப்பெற்றவர் கூரம்பாக தன்னை எண்ணிய ஒளவை போல் அறக்கூர் என என்னைக் கூறி மழுமொட்டையாக்கி விமர்சித்த உத்தமி குடும்பப்பணியும் தெய்வப்பணியும் ஒன்றாகவே கருதி வாழ்ந்தவர் அம்மையார் அவர் இறைவன் பாதங்களை இறுக்கவே பற்றிவிட்டார். அவர் மறைவு குறித்து பிறப்புக்கும் இறப்புக்கும் நெருங்கின தொடர்புண்டு பிறந்த அன்றே இறப்பதும் உறுதியாகி விட்டது அது எப்போது வரும் என்பதில் அமைந்தது எம்வாழ்நாள் "ஆக்கம் நசை இட அறம் மறந்து வாழும் எம்மை வாழ்நாட்கள் சென்றன" என எச்சரிக்கின்றது. நாவலடியார் மரணம் நிச்சயமான ஒன்று கூடவே வந்தோம் வழிகாட்டியாக நல்வாழ்வு வாழ்ந்து நாமும் அதேவழி தான் என அமைதி பெறுவோம்.
அம்மையாரின் ஆன்மா சாந்தியடைய குடும்பத்தாருடன் உற்றாருள் ஒருவனாய் நானும் உறவினர் நண்பர்களுடன் சேர்ந்து பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி.!!!

மு. முத்துத்தம்பி

சுன்னாகம் கிழக்கு.

சுன்னாகம்.

இளைப்பாறிய ஆசிரியர்.

## With My sympathy

Just a note to let you know that many warm thoughts are there with you. When I was in Sri Lanka. While we connot Understand why certain thing should be remember god in heaven beholds what we cannot see. Loot a head tomorrow and trust you will find waiting there the sunlight that seemed to be hidden by yesterday's clouds of despair.

*From:*
*Great grandson*
*Kirishanth and my family*

## பேரன் வேல்மகிபனின் அனுதாபச்செய்தி

அப்பாச்சி என்றவுடன் உடனே நினைவிற்கு வருவது உபசரிப்பும் துணிவுதான். சொந்தம் தெரிந்தவர் என்று மட்டுமல்லாமல் போராளி தொடக்கம் எதிர்பாரா விருந்தாளிவரை வீட்டிற்கு. வருவோருக்கு வற்புறுத்தி உணவளிக்கும் பழக்கம் அவரிடம் நிறையவே இருந்தது. நேர்மையிருந்ததால் பேச்சில் துணிவும், ராங்கியும் நிறையவே இருக்கும். அது சோர்வாயிருப்போரையும். உற்சாகப் படுத்தும். பிறப்பாலும் இறப்பாலும், தெளிவாக வரையறுக்கப்பட்ட வாழ்க்கையில் உண்மையாக மகிழ்ச்சி சுதந்திரம் மட்டும்தான். தொழில் சுதந்திரம் கமக்காரர்களிடம் நிறையவே இருந்தது. அதனால் தான் அவர்கள் மகிழ்ச்சியாய் இருந்தனர். தனது குட்டி இராச்சியத்தை விட்டு இடம்பெயரும் நிர்ப்பந்தம் எல்லோரைப் போலவுமே அவருக்கும் ஓர் இழப்புத்தான். அற்ப சலுகைகளுக்காய் விலை போகாமல், கௌரவத்துடனான நிரந்தர அமைதிக்கு ஒற்றுமையாய் தியாகிகள், அணியில் துணை நிற்பதே அன்னாரிற்கு, நாம் செய்யக்கூடிய பிரதியுபகாரமாய் இருக்கும்.

*வே. வேல்மகிபன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தராக
கடமையாற்றும் திரு.சி.பாலசுந்தரம் அவர்களின்
அன்பு மாமியார்

## திருமதி
## இராமசிப்பிள்ளை செல்லையா

அவர்கள் 22.01.2004 இல்
காலமானதையிட்டு அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
பச்சிலைப்பள்ளி
பளை.

*பிரதேச செயலரும்,*
*உத்தியோகத்தர்களும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் பணிபுரியும்
திரு.செ.கதிர்காமநாதன் அவர்களின்
அன்புத்தாயார்.

## திருமதி
## இராமசிப்பிள்ளை செல்லையா

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம்,
உடுவில்

*பிரதேச செயலரும்,*
*அனைத்து உத்தியோகத்தர்களும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் அங்கத்தவர்
திரு.செல்லையா யோகநாதன்
அவர்களின் அன்புத்தாயார்.



அமரர்

## திருமதி. செல்லையா இராமாசிப்பிள்ளை

*வாழும் போதே பல இதயங்களை ஈர்ந்தவர்*
*வீழ்ந்தும் போனாய் எம்மிடையே விளக்கேற்ற ஆளில்லை*
*மலர்ந்த சூரியன் மறைந்து போனாயே!*
*துளிர்த்த இதயங்கள் தளர்ந்து போனதே*
*உறவாய் இருந்த உம் நினைவுகள் இரவாய் போன*
*எம் இதயங்களில் நிலவாய் உன்முகம் மலர்ந்திட*
*ஒருமுறை மறைந்த நீ மறுமுறை எழுந்து வாராயோ!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஐயனார் சனசமூக நிலையம்
ஐயனார் கோயிலடி,
சுன்னாகம்.
24.01.2004.

*நிர்வாகத்தினர்.*
*அங்கத்தவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்

எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய் விளங்கி எம்மை எல்லாம் வாழ வழிகாட்டிய எங்கள் குடும்பத் தலைவி பிரிவை தாங்கமுடியாது துயருடன் இருந்த எமக்கு ஆறுதல் கூறிய யாவருக்கும் ஈமைச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும். புத்தளத்தில் உடன் உதவி செய்த அனைவருக்கும் இம்மலரினை வடிவமைத்த ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகத்தினருக்கும். சகல கிரியைகளையும் செய்த சமய குருமார்களுக்கும். அந்தியேட்டிக் கிரியைகளில் சமூகம் கொடுத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மக்கள். மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.
பூட்டப்பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

தையிட்டிப்புலம் தெல்லிப்பளை
↓
சந்திரசேகமுதலி
↓
மாப்பான முதலி
↓
ஐயம்பெருமாள்
↓
வேலாயுதர்
↓
சின்னப்பு
↓
**செல்லையா**

மல்லாகம் வாரியார் வளவு
↓
பூத உடையார்
↓
கதிர்காம உடையார்
↓
வேலுப்பிள்ளை
↓
சிதம்பரப்பிள்ளை
↓
வேலுப்பிள்ளை + செலாசிப்பிள்ளை
↓
**இராமாசிப்பிள்ளை**

**செல்லையா — இராமாசிப்பிள்ளை**
↓

Dr. வேலாயுதபிள்ளை (புத்தளம்)
+
செந்திரு
(முன்னைய பதிவாளர் சுழிபுரம்)
↓
1.ENG வேல்மகிபன்
+
வாகினி } (கனடா)

2. வேல்செல்வி
+
ஆனந்தகுமாரசுவாமி } (லண்டன்)
↓
கிரிசாந்.

3. வேல்சுபதி
+
சூரியகுமாரன் } (லண்டன்)
↓
மாதுரி
மாதுரா

யோகநாதன்
+
செல்லாச்சிப்பிள்ளை
↓
1. காண்டீபன்

2. காந்தரூபி
+
நந்தீஸ்வரன்
(ஆசிரியர்)
↓
திவ்யா
கஜானன்

3. காந்தரூபன்
(உதயன் பத்திரிகை வன்னி)

சிதம்பரநாதன்
+
சாந்தினி
↓
1. மகிந்தன்
2. அசந்தா

கதிர்காமநாதன்
+
நல்லநாயகி
↓
1. விமலன்
2. நிறஞ்சன்
3. நிரோஜா

சோதிநாதன்
+
பவளமலர்
↓
1. பரமசிவம் (லண்டன்)
2. வசந்தினி
+
வரதன் (வர்த்தகர் கொழும்பு)
↓
சோபனா

3. நந்தினி
+
கேதீஸ்வரன்
↓
தேனுசா

4. நர்சினி
கலைவாணி
கார்த்தீபன்
தெய்வேந்திரன்
வைரவச்செல்வன்
ஜெயச்சந்திரன்
தவாசினி
மசாந்தினி

இராமநாதன் (சுவிஸ்)
+
வசந்தா
↓
கோகுல்நாத்

இராணிரத்தினம்
+
Dr.குகதாசன் J.P
(சாமஸ்ரீ)
↓
1.ENG நந்தினி
+
ENG ஈஸ்வரன் } (அமெரிக்கா)
↓
நிகேசன்
யுகேசன்

2. குமுதினி
(கணனி ஆசிரியை)
+
சிறிதரன் } (கனடா)
↓
குகதாரணி

3. ஜெயவாணி
(பொறியியல் பீடம்) பேராதனை.

இந்திராணி
+
சுடர்
(ஓய்வு பெற்ற படவரைஞர்)
↓
1. தீபன் (Bsc)
2. நிமலன்
(பொறியியல் பீடம்)
மொறட்டுவ

3. நிலானி

பவளராணி
+
பாலசுந்தரம்.
(கிராமஅலுவலர் பளை)
↓
1. கோகிலநாத்
2. துஷா
3. மேகலநாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம். 303, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org